ஸ்ரீ

# லோகரஞ்சனி.

இந்து ஸ்திரீபுருஷர்கள் ஞாநாபிவிருத்தியின் பொருட்டு பிரசுரமாகும்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் - ௧௦.] துர்முகிஸ்ரீ கார்த்திகைமீ. [எண் - ௧௧.

## வேதாகமப்பிரகாரணம்.

### காயத்திரீ
என்னும்
### மந்திரபுஷ்ப ஸாரம்.

(௩௬௮-ம் பக்கத்தொடர்.)

అంతశ్చరతి భూతేషు గుహాయాం విశ్వమూర్తిషు । త్వం యజ్ఞస్త్వం విష్ణుస్త్వం వషట్కారస్త్వం రుద్రస్త్వం బ్రహ్మత్వం ప్రజాపతిః ॥

நீ அநேக மூர்த்திகளான உயிர்களுடைய இருதய குகையினுள்ளே சஞ்சரிக்கின்றாய். நீ யாகசொரூபி; சர்வவியாபகனான விஷ்ணு; வஷட்காரசொரூபி; துக்கத்தைப் போக்கடிக்கிறவன்; சிருஷ்டிகர்த்தா; பிரஜைகளுக்கு அதிபதி.

త్వం తదాప ఆపో జ్యోతీ రసోఽమృతం బ్రహ్మభూర్భువస్సువరోం ॥

பிரசித்திபொருந்திய நீ ஜலம், சோதி, இரசம், அமிர்தம், பிரம்மம், பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் இவைகளைச் சொரூபமாக வுடையவன், ஓங்காரசொரூபி.

ఈశానస్సర్వవిద్యానామీశ్వరస్సర్వభూతానాం బ్రహ్మాధిపతిర్బ్రహ్మణోఽధిపతిర్బ్రహ్మా శివో మే అస్తు సదాశివోం ।

நீ சகலவித்தைகட்கும் பிரபு, சமஸ்த பூதங்களுக்கும் ஈச்சுவரன், வேதத்திற்கு அதிபதி, சதுர்முகனுக்கு அதிபதி, பரப்பிரமசொரூபன், மங்களசொரூபன், எனக்கு எப்போதும் மங்களத்தைக் கொடுக்கின்றவன் ஆனகயால், ஓங்காரசொருபன்.

తద్విష్ణోః పరమం పదగ్ం సదా పశ్యన్తి సూరయః । దివీవ చక్షురాతతం ।

ஆகாசத்திலே வியாபித்துக்கொண்டிருக்கும் சூரியனைப்போல பிரகாசிக்கின்ற விஷ்ணுவினுடைய மேலான வைகுண்டத்தை நித்திய சூரிகளாகிய ஞானிகள் எப்பொழுதும் பார்க்கிறார்கள் அலலது அடைகிறார்கள்.

తద్విప్రాసో విపన్యవో జాగృవాంసస్సమింధతే విష్ణోర్యత్పరమం పదం ॥

விஷ்ணுவினுடைய யாதொரு மேலான பதமானது உண்டாயிருக்கின்றதோ அந்த பதத்தை ஞானிகள் அநுபவிக்கிறவர்களாகவும், அதில் ஜாக்கிரதையாகவும் விளங்குகிறார்கள்.

ఋతగ్ం సత్యం పరం బ్రహ్మ పురుషం కృష్ణపింగలం ఊర్ధ్వరేతం విరూపాక్షం విశ్వరూపాయ వై నమో నమః ॥

எப்பொழுதும் சத்தியனும், மேலானவனும், சிருஷ்டி கர்த்தனும், காப்பாற்று கிறவனும், பாபத்தைப் போக்கடிக்கிறவனும், காந்தியையுண்டாக்கிறவனும், மேலான தேஜசுண்டானவனும், மகிமை பொருந்திய கண்களை யுடையவனும், நீட்சிபொருந்திய ரூப முடையவனும், ஆன பரமாத்துமாவின்பொருட்டு நமஸ்காரஞ் செய்கிறேன்.

తత్సవితుర్వరేణ్యం । భర్గో దేవస్య ధీమహి । ధియో యో నః ప్రచోదయాత్ ।

எந்ததேவன் எங்களுடையபுத்தியை ஞானத்தில் நுழையச்செய்கிறானோ அப்படிப்பட்ட ஜகத்தைப் படைத்த தேவனுடைய சிரேஷ்டமான தேஜஸ்ஸை தியானஞ் செய்கிறோம்.

ஹரி: ஓம்.

# இதிகாசபுராணபிரகரணம்.

(விஷ்ணுபுராணத்திலிருந்தெடுத்தது.)

(க௪௦-ம் பக்கத் தொடர்.)

அந்தணர் முதலிய நான்கு வருணத்தாரும் தங்களுக்குரிய தருமத்தைவிட்டு இழிவான கருமங்களி லிருப்பாராகில் அவர்கள் நக்னர் என்கிற பெயரை யடைவார்கள். ஆதலால் யோக்கியரா யிருப்பவர்கள் பாஷண்டி முதலான நக்னரோடு சம்பாஷணைகளை எப்போதும் விட்டிருக்கவேண்டும். தேவபிதிர்க்களைக்குறித்துச்செய்யுஞ் சிரார்த்தமும் இப்படிப்பட்ட நக்னராலே பார்க்கப்படுமாயின் அவர்களுக்குப் பிரீதியை யுண்டாக்கமாட்டாது.

## சததனு உபாக்கியானம்.

பூர்வகாலத்திலே சததனு என்று அரசன் ஒருவனிருந்தான். அவனுக்குப்பத்தினி சயிப்பியையென்பவள். அவள் தன் கணவனுக்கு உரிய தருமங்களையே முக்கியமாகக்கொண்டவளாயிருந்தாள். அவளோ மகாபதிவிரதை, சகலலக்ஷணங்களோடுங் கூடியவள். இப்படிப்பட்ட மனையாளோடுகூட அவ்வரசன் மிகுந்த மனநிலைமை யுள்ளவனாய், ஜபங்கள், ஓமங்கள், தானங்கள், உபவாசங்கள், அர்ச்சனைகள் முதலானவைகளினாலே தேவதேவனாய் எங்குநிறைந்தவனான ஸ்ரீஜனார்த்தனனை ஆராதித்துவந்தான். ஒருகாலத்தில் அந்தத்தம்பதிகளிருவரும் கார்த்திகையேகாதசியில்உபவாசமிருந்து கங்காநதியின் தீர்த்தத்தில் ஒருமிக்க நீராடிக்கரையேறினார்கள். அப்போது அங்கேயொருபாஷண்டி எதிராக வரப்பார்த்து, அந்தராஜாவின் பத்தினியானவள், அவனோடு பேசாமல் மவுனமாகவேயிருந்து, அவனைப்பார்த்ததோஷம் போவதற்குச் சூரியதரிசனஞ் செய்தாள். அவ்வரசனோ தனக்கு வில்வித்தை கற்பித்த ஆசிரியனுக்கு அப்பாஷண்டி சிநேகிதனென்கிற கவுரவத்தைமுன்னிட்டுச் சற்றுநேரம் அவனோடு சம்பாஷித்துக்கொண்டிருந்தான். பின்பு அவ்விருவருங்கூடி ஸ்ரீமந்நாராயணனுக்கு திருவாராதனமுதலான கைங்கரியங்களைச் செய்துவந்தார்கள். பின்பு காலமுறையிலே அவ்வரசன் மரணமடைய, அவனோடு உடன் கட்டையேறினாள் பிறகு அவ்வரசனானவன் உபவாசவிரதத்திலே பாஷண்டசல்லாபஞ்செய்த அபசாரத்தினாலே நாயாகப்பிறந்தான். அந்த ராஜபத்தினியோ காசிராஜாவுக்குப் புத்திரியாய்ப்பிறந்து, சர்வலக்ஷணசம்பூரணையாய் மிகுந்த கல்வித்தேர்ச்சியுமுடையவளாய்ப் பூர்வஜன்ம சுகிர்தத்தினாலே ஞானமுமுள்ளவளாயிருந்தாள். அவளை, அவளுடைய தகப்பனாகிய காசிராஜன் கலியாணஞ்செய்துகொடுக்க எத்தனப்படுகையில், அந்தப் பெண், தனக்கு இப்போது கலியாணம்வேண்டுவதில்லையென்று சொல்லித் தகப்பனுடைய முயற்சியைத் தடுத்துவிட்டாள் பின்புஅவள் தன்பர்த்தா நாயா யிருப்பதைத் திவ்விய ஞானத்தினாலறிந்து விதிசையென்கிற நகரத்திற் போய் நாயாயிருக்கிற தன்பர்த்தாவைக்கண்டு தினந்தோறும் அன்போடும் மரியாதையோடும் நல்லஉணவுகளைக்கொடுத்துவந்தாள். அந்தநாயானது அவள்கொடுக்கு முணவுகளையுண்டு வெகு சந்தோஷத்தினாலே அவளுக்குத்தன் சாதியியல்பின்படி மிகப்பணிவான செய்கைகளைச்செய்துவந்தது. அதைக்கண்டு அந்த ராஜகன்னிகையானவள் மிகவெட்கமுற்றவளாய் அந்நாயைநோக்கி வணங்கி "ஐயா! மகாராஜாவே! நீர் விரததினத்திலே தீர்த்தஸ்நானஞ் செய்தபின் ஒரு பாஷண்டியோடு தாக்ஷிணியத்தினாற்பேசினீரே, அந்தப் பாதகத்தினாலன்றோ இந்த ஈனமான நாய்ப்பிறப்பிற் பிறந்து உம்மடியாளாகிய எனக்கு வணக்கஞ் செய்கிறீர்; இதைநீர் நன்றாய் நினைத்துக்கொள்ளும்" என்று சொல்லி நினைப்புமூட்டினள். இப்படி அவள் சொன்னதைக்கேட்டு அந்நாயுருவமான அரசன் நெடுநேரஞ் சிந்தித்து முன்ஜன்னத்தின் நினைப்பைக்கொண்டு, மிகுந்த வெறுப்படையடைந்து அப்பட்டணத்தைவிட்டு வெளியிலோடி மலைத்தடத்தினின்றுங் கீழேவிழ்ந்து மரித்து நரிப்பிறப்பையடைந்தான். பின்பு அவ்விராஜகுமாரி ஞானதிருஷ்டியினாலே தன் புருஷனுக்கு நேரிட்ட இரண்டாம் பிறப்பையறிந்து கோலாஹலமென்கிற பருவதத்திற் போய் நரியாயிருக்கிற தன்புருஷனைக்கண்டு முன்போலவே வணக்கத்துடனே, "ஐயனே! நீர் சுனகமாயிருந்தபோது நான் பாஷண்டசம்பாஷணத்தால் நேர்ந்ததை உமக்கு நினைப்பூட்டினேனே, அதை இப்போது நினைக்கிறீரா" என்று சொன்னாள். அதைக்கேட்டு அந்த நரிப்பிறப்புடைய வேந்தன் அப்பேச்சை சத்தியமென்று நினைத்து, அக்காட்டிலே இரையெடாமற் பட்டினியிருந்து உயிர் துறந்து, அந்த மனிதரில்லாக்காட்டிலேயே செந்நாயாகப்பிறந்தான் அப்போதும் அக்குற்றமற்ற பெண் அங்குசென்று, "நீர் செந்நாயன்றோ?

சததனுவென்கிற மகாராஜனல்லவோ நாயாய், நரியாய், இப்படியானீரோ" யென்று தன்கணவனுக்குப் பூருவஜனனங்களை நினைப்பித்தாள். அரசனும் பூர்வஜனனங்களை நினைத்து உடலை விட்டுக் கழுகாய்ப் பிறந்தான். அப்போதும் ராஜபத்தினி அவ்விடம்போய், "ஐயா! நீர்கழுகு செய்யுஞ்செய்கைகள் செய்ததுபோதும்நீர் முன்பிறப்பிற் பாஷண்டனோடு உரையாடின பாபமன்றோ இப்படிசெய்தது" என்று சொல்ல அவனும் அதை நினைத்து இறந்து காகமாகப் பிறந்தான். அதிலும் அப்பதிவிரதைகண்டு, அவனைநோக்கி, "சகலராஜாக்களும் வசப்பட்டு உமக்கு * பலிகொடுக்கப்பெற்றிருந்த நீர் இப்போது பலிபோஜனஞ்செய்கிற காகமானீரே, இதைநினையும்" என்று நினைப்பூட்டவே அரசனுஞ் சிந்தித்து பரித்துக் கொக்காக, அச்சனனத்திலும் மனையாள்வந்து நினைப்பூட்டப்பெற்று உயிர்விட்டு மயிலாய்ப்பிறந்தான். அப்போது அழகுசிறந்த அச்சன்னிகை அம்மயிலைத் தன்னிடத்திற் கொண்டுவந்து அதற்கு இன்பமான உணவுகளை அப்போதப்போது கொடுத்துப் போற்றிவளர்த்துவந்து தன்பிதா செய்த அசுவமேதயாகத்தின் அவபிரததீர்த்தத்திலே நீராட்டித் தானு நீராடி, மயிலாயிராநின்ற அம்மகாராஜனுக்கு நாய்பிறப்பு முதல் மயூரப்பிறப் பீருகநேர்ந்த பிறப்புகளை நினைப்பித்தாள். அந்தவேந்தனும் தானெடுத்தஜனனவரிசையை நினைத்துத் தன் சரீரத்தை விட்டு ஜநகமகாராஜாவுக்கு மகனாகப் பிறந்தான்.

இப்படியாக அவன் வளர்ந்து வந்தபோது அந்தப்பதிவிரதாசிரோன்மணி தனக்குக் கலியாணயத்தினஞ் செய்யும்படி தன்பிதாவைத் தூண்டினாள். அவ்வார்த்தையின்படி அந்தராஜா சுயம்வரம்கோடிக்க, அச்சுயம்வரத்திற்குவந்த அநேக ராஜகுமாரர்களுக்குள்ளே அவ்விதேகராஜகுமாரனை தன்கணவனையே அப்பெண்மணி வரித்து அவனோடுகூட மறுபடியும் சகலபோக பாக்கியங்களையும் அனுபவித்துக்கொண்டு வாழ்ந்திருந்தாள். அவ்வரசனும் தன்தந்தை சொர்க்கஞ்சேர்ந்தபின் அவ்விதேக ராச்சியத்திற்கு அரசனாகி அநேகரை வென்று திறைபெற்றும் பலயாகங்களையுஞ்செய்து பலதானங்களையும் வழங்கிப் புத்திரரையும் பெற்று நீதிப்படியே துரைத்தனநடத்திவந்து ஒரு யுத்தத்திலே தருமவழியினாலேயே உயிர்விட்டான். அப்போதும் அவனுடைய பத்தினி வெகு சந்தோஷமாய் உடன்கட்டையேறினாள். பின்பு அவ்வரசன் அந்தத்தருமபத்தினியோடு கூடவே இந்திரலோகத்தையுங் கடந்துபோய்ச் சகல இஷ்டங்களும் பெறும்படியான மகாபுண்ணியலோகங்களையடைந்தான். இப்படி அந்தத்தம்பதிகள் முன்சொல்லியபடி மகாசுத்தியைப்பெற்றுப் பிரியாமலே அக்ஷயமான புண்ணியலோகம்பெற்றார்கள்.

ஆதலால் மகாபாவிகளான பாஷண்டிகளோடு பேசுவது முதலானவற்றை விடவேண்டும். மற்றக்காலங்களிற் சிறிதுசெய்தாலும் வைதிக அனுஷ்டானகாலத்தில் விசேஷமாய் அதைவிடவேண்டும். யாகங்களில் தீக்ஷிதனாயிருப்பவன் அதிலும் விசேஷமாய் விடவேண்டும். எவன் வீட்டில் ஒருமாதம் வைதிக கர்மலோபம் உண்டாகிறதோ அவனைக்கண்டால் உடனே சூரியபகவானைப் பார்க்கவேண்டும். அப்படியிருக்க வேதசம்பந்தத்தையே முழுவதும் விட்டிருக்கிற பாஷண்டசம்பந்தத்திற்குக் கேட்கவேண்டுமோ, அதிலும் பாஷண்டரோடு நேசித்து அவர் சோற்றையுண்பதும் அவரைத் தன்வீட்டிலுண்பிப்பதும் வேதவாதங்களை இகழ்ந்து விரோதமாய்ப் பேசுவதுமான அசத்காரியஞ் செய்கிறவர்களுடைய சம்பாஷணை, கூடியிருத்தல் முதலானவைகளைக் கனவிலுஞ் செய்யாமல் விட்டொழியவேண்டும். * பாஷண்டிகளையும், தவிரத்தக்க காரியங்களைச்செய்கிறவர்களையும் † பிடாலவிரதத்தி லிருப்பவரையும், ‡ சடனையும் § ஹைதுகர்களையும், ○ பகவிருத்திகளையும், வாயாலுங்கூடப்பூசிக்கலாகாது. அதிகபாவிகளும் துராசாரமுடையவருமான அந்தப்பாஷண்டருடைய சம்பர்க்கத்தை வெகுதூரத்தில் விட்டிருக்கவேண்டும்.

---

* பலி என்றால் அரசர்க்குக் கொடுக்குந் திறைக்கும் வைதிக கிரியைகளில் காக்கைக்குப்போடுஞ் சோற்றுக்கும் பெயர்.

---

* பாஷண்டி=வேதசாஸ்திரமார்க்கத்தைத் துறந்தவன்.

† பைடாலவிரதன்=பூனைவேடம்போட்டதுபோலே தண்டகமண்டலாதி தருமக்குறிகளைப்பகிரங்கமாகத்தரித்து யார்க்குந்தெரியாதபடி பாபங்களைச்செய்துவருபவன். (பிடாலம்=பூனை.)

‡ சடன்=எதிரில் பிரியமாய்ப்பேசுவதும், மறைவில் தீங்குசெய்வதுமாய் வெளிப்பட்ட அபராதச்செய்கையுடையவன்.

§ ஹைதுகன்=சத்கருமங்களைச் செய்யுமளவில் துஷ்ட ஹேதுக்களைக்காட்டி அவற்றில் ஐயமுண்டாக்கிறவன்.

○ பகவிருத்தி=கொக்கைப்போலே ஒன்றுமறியாதவனாயுட்காந்திருந்து சமயம்பார்த்து மோசஞ்செய்கிறவன். (பகம்=கொக்கு.)

# ஆரியமத சித்தாந்தப் பிரகரணம்.

## அத்வைதமதம்.

(௧௪௨-ம் பக்கத்தொடர்.)

பின்னும் "பராஸ்யஸக்திர்விவிதைவசுரூயதே" இவருடையசிரேஷ்டமான சக்தியானது அநேகவிதமாய்ச் சொல்லப்பட் டிருக்கிறது என்கிற சுருதிக்கும் விரோதம்வரும். ஆகையால் அன்னியமல்லவென்பதுங்கூடாது, பின்னும் ஆத்மாவை ஜடமென்றும் மாயையை சேதனமென்றும் சொல்லவேண்டியதாகும்; ஆத்மாவுக்கு அவித்தைை முதலிய பெயரும் வரும். சச்சிதானந்த சுவரூபியான ஆத்மாவுக்கு அநிருத ஜடதுக்கமும் சொல்லவேண்டியதாகும்; அநந்நியமானதல்ல, பின்னத்திற்கும் அபின்னத்திற்கும் விரோதமாகையால் உபயாத்துமகமுமல்ல. ஆகையால், அக்ஞானம் வாக்குக்கெட்டியதல்ல; இப்படியிருக்கிற அநாதியான அக்ஞானத்தினாலே அவிவேகமும், அதினாலே அபிமானமும், அதினாலே ராகத்துவேஷாதிகளும், அவைகளினால் கருமமும், அதினாலே சரீரமும், அதினாலே சமுசாரதுக்கமும, ஆத்மாவுக்கு அக்ஞானத்தினாலேயே பரம்பரையாய் வருகிறதென்று தெரிந்துக்கொள்ளவேண்டியது.

### கைவல்லிய நவநீதம்.

மாயையென்பதே துடையதாரொப்படி
வந்தது வருவாயேன்
மாயையென்பது பிரமத்தின்வேறெனின்
வஸ்துவு மிரண்டாமே
மாயையென்பதும் பிரமமுமொன்றெனின்
வஸ்துவும் பொய்யாமே
மாயையென்ற மேகங்களுக்கொருசண்ட
மாருத குருமூர்த்தி. (௧)

அதனையின்னதென் றுரைத்திடப்படாமையா
லவாச்சிய வடிவாகு
மிதுதனக்குள துடலியானுலகு
மெய்யெனு மவருடையோர்கள்
கதையிலாதபொய் வந்ததிப்படியென்று
கண்டபே ரிலைமைந்தா
விதனமாயையேன் வந்ததென்றூற்புத்தி
விசாரமற் றதனாலே. (௨)

அருவமாகுமாயா விவித்தைகள்வினை
யாடுமுன் றெரியாவே
யுருவமாம்பல கந்தர்ப்பசேனையா
யுதித்தபின் வெளியாகும்
பிரமசத்திக ளனந்தமாமவைக்கண்டு
பிடித்திடல் கூடாதே
பாவபூசங்கள் கண்டனுமானத்தாற்
பலருக்கும் வெளியாமே. (௩)

காரியங்களுஞ் சத்தியாதாரமுங்
காணுமற்றது மாயம்
பாரினிறை மாயாவியுஞ்சேனையும்
பார்ப்பவர் கண்காணும்
வீரியந்திகழ் வித்தையாயினசத்தி
வெளிப்படா ததுபோலப்
பேரியற்பிரமத்துக்கு மூலகுக்கும்
பிறிதுசத்தக ளுணடே. (௪)

சத்திசத்தனைத் தவிரவேறன்றுகாண்
சத்தனு மாயாவி
வித்தைகாட்டிய விந்திரசாலம்போய்
வித்தவா னும்போலப்
புத்திமைந்தனே சத்திமானாகிய
பூரண வான்மாவாம்
வத்துநிர்ணயஞ் சொன்னசித்தாந்தத்தின்
வழிகண்டு தெளிவாயே. (௫)

இல்லையாகிய சத்தியையுண்டென்ப
தெப்படி யெனக்கேட்கிற்
புல்லையாதியா மசேதனப்பொருளெலாம்
பூத்துக்காய்ப்பன பாராய்
நல்லையாமகனே யதிற் சிற்சத்தி
நடந்திடா திருந்தாக்கால்
தொல்லையாய்வருஞ் சராசரவுயிர்க்கெலாஞ்
சுபாவங்கள் வேறாமே. (௬)

கருப்பைமுட்டையுட் பறவைகள்பலநிறங்
கலந்த சித்திரம்பாராய்
யருப்பமாஞ்சத்தி நியமமில்லாவிடி
லரசிலா நகர்போலாம்
நெருப்புநீர்களாங் கசப்புமேமதுரமா
நீசனு மறையோனும்
பொருப்புமேகமாங் கடலெலாமண்களாம்
புவனமிப்படிப் போமே. (௭)

முற்கூறிப் போந்தத்தில் இங்ஙனமாயிருக்கிற அநாதியான அஞ்ஞானத்தினாலெனக் கண்டிருக்கிறதால், ஆதியில்லையெனின், அந்தமுமில்லையென்பது நிக்ஷயமாயிருக்கவேண்டுமன்றோ! அங்ஙனமாயின் ஜீவனுக்கு முத்தியேயில்லையென்றாகிறதெனின், அங்ஙனமன்று; அஞ்ஞானத்திற்கு ஆதியில்லாவிடினு மந்தமுளதேயாம்; உலகத்திலே சிலபதார்த்தங்கட்கு ஆதியில்லாவிடினும் அந்தமுண்டு; சிலவற்றிற்கு அந்தமில்லாவிடினும் ஆதியுண்டு. அதெங்ஙனமெனின் பிராக்பாவத்திற்கு ஆதியில்லை அந்தமுண்டு; பிரத்துவம் ஸாபாவத்திற்கு ஆதியுண்டு அந்தமில்லை; குடமுண்டாகிறதற்குமுன் குடமில்லையென்றதாகிய அபாவம் வெகுகாலமாயிருக்கிறது. குடமில்லையென்கிற

அபாவவாக்கியம் எப்போ துண்டாயிற்றென்பது தெரியாவிடினும் குடமுண்டானவுடனே ஆதியில்லை யென்கிற அபாவவாக்கியத்திற்கு அந்தமுண்டாய் விட்டது. இதுதான் பிராக்பாவம். நசிக்கச்செய்வதினால் இல்லாமையுண்டாகிறது. உண்டான அந்த இல்லாமைக்கு அந்தமில்லையாகையால், இதுதான் பிரத்துவம்ஸாபாவம். மேலும் வாத பித்த சிலேஷ்மத்தினாலுண்டான வியாதிக்குக்காரணமெதுவெனத் தெரியாவிட்டாலும் வைத்திய சாஸ்ரத்திற் சொல்லப்பட்ட மருந்துகளினால் எப்படி பரிகாரம் காணப்படுகிறதோ? அப்படி அக்ஞானத்திற்கு, மூலமின்னதெனத் தெரியாவிட்டாலும் வேதாந்த சாஸ்திரவாக்கியத்தினாலுண்டாகிற ஞானத்தினால், அக்ஞானம் நாசமாகிறதென்பது சித்தாந்தம்.

### கைவல்லிய நவநீதம்.

ஆர்க்குங்காணவு மறியவும்படாதென்று
மவாச்சிய வடிவென்றுஞ்
சேர்க்குநாமரூபப்பயிர் வித்தென்றுஞ்
செப்பிய சிற்சத்தி
பேர்க்குமாறெங்ஙன் பிறித்திடப்படாதெனிற்
பிரமபாவனை யொன்றாற்
பார்க்குமாறெங்ஙன் முத்தியாகுவதெங்ஙன்
பரமசற்குரு மூர்த்தி. (க)

வாயுஸ்தம்பனஞ் சலஸ்தம்பன
மணிமந்திர மருந்தாலே
தேயுஸ்தம்பனஞ் செய்திடலதிலதிற்
சிறந்தசத்திக ளெவ்வே
நீயசச்சிதானந்தமாய் வேறொன்று
நினைந்திடா திருப்பாயேல்
மாயைசத்திபோ மீதன்றிமந்திர
மறைகளிற் காணேமே. (உ)

மேவுமண்ணிலவ் வியத்தமேவியத்தமாம்
விவகரித்திட வேண்டி
நாவினான்மண்ணைக் கடமென்பரக்கட
நசிப்பது நாவாலே
பாவுநாமரூபங்களை மறந்துமண்
பார்ப்பதே பரமார்த்தஞ்
சீவபேதகற்பிதங்களை மறந்துநீ
சின்மய மாவாயே. (ங)

அவ்வியத்தம்=வெளிப்படாமை ; வியத்தம்=வெளிப்படல் ; பித்தளை முதலியவற்றாலாய பாண்டங்களைக்கூறுகது ; செல்வம் வந்தழியன்றி நிரந்தரமன்றாமையினென்க. விவகரிப்பான் வேண்டிக் கடமெனல், விவகாரிகசத்து நீன்குகாலத்தும் மண்ணையன்றிக் கடமெனற்குப் பொருள் தோற்றன்மாத்திரமாதலால், அதனை மண்ணாகக்காண்டல், பாரமார்த்திகசத்து. மண்ணையன்றிக் கடமெனலோர் முதலன்றென வுணராமல் சுயமபெனக்கருதிக் கடமெனக்கூறல், மூடம், கடமெனக் காணாது மண்ணெனக் கீர்ண்மை விவேகம் சொல்லாலென்றாது நாவினாலென்றது ; நாவினாலாயது சொல்லாதலா லிது துணைக் கருவியெனப்பெற்றாம் ஆதலின் கருவியாகு பெயர். இவ்வுவமைபோல ; அறிவைச் சீவனீசன் செகத்தெனக் கற்பனையாகக் கொள்ளும் விபரீதங்களை மெய்யெனக் கோடல், விவகாரிகசத்து ; இப்பேதங்களை யெல்லாம் விசாரத்தால் மறந்து, அறிவாகக் காண்டல் பாரமார்த்திகசத்து ; சீவபேதமென்பது, சீவனாதியாகப் பேதிக்கும்பேதம். அதாவது சீவேஸ்வரசகம் இம்மூன்றுமறிவின் கற்பிதமன்றிச் சுயம்பல்லாமையின், சீவபேத கற்பிதங்களென்றார். தெளிந்தவிடத்தனைத்து மறிவாகமுடிதலின் நீ சின்மயமாவாயே யெனப்பட்டதென்க. கடமெனினுங் குடமெனினு மொக்கும் பரமார்த்தம், உண்மை. எனவே விவகாரிகம், கற்பிதம் என்றாயிற்று. அவ்வியத்தம், வியந்தம், எனக்கூறவந்தது மண்ணையன்றிக் கடமின்றெனற்கு. அதுபோல அனைத்து மறிவையன்றி யின்றெனற்கென்க. கடாதிகளை மண்ணாய்ப்பார்ப்பதுபோல சகமாதிதிரிபதார்த்தங்களையுஞ் சின்மாத்திரமாய்ப் பார்க்கி லன்னியமின்றித் தானாய்விளங்கும். இங்ஙனம் விளங்குதலே முத்தியாதலால் இது மூன்றும் வினாவிற்கு விடையெனக்கொள்க.

### ஞானவாசிட்டம்.

வானகிராமனைத்துங் கற்பனைமாத்திரம்
வாளா வளராநிற்கு
மான்சகநனவுதனிற் கனவுபோலிராகவனே
யறிதி யன்றே
யீனமுறப்பிறப்பில்லை யிறப்பில்லையெவ்விடத்து
மொன்றா மென்று
ஞானபரமார்த்தத்தா லிவையெல்லாம்பொய்யாக
நண்ணு மன்றே. (க)

எனைத்துஞான நன்னூலி
னியம்புமறதி யாதென்னி
லனைத்துங்கனவு காண்பதுவே
யன்றேவவிஞ்சை யிங்கில்லை
வினைத்திண்கவலை செய்கின்ற
வெய்யமாயை தானில்லைத்
தினைத்துன்பமு மற்றுபசாந்தத்
திரமாம்பிரமை மேயுளதே. (உ)

## தேஜோபிந்துபநிஷத்,

### கூ-வது அத்தியாயம்.

ఆత్మనోఽన్య జ్జగన్నాస్తి ఆత్మనోఽన్యత్సుఖంచన ।
ఆత్మనోఽన్యద్గతిర్నాస్తి సర్వమాత్మమయంజగత్ ।
ఆత్మనోఽన్యన్నహి క్వాపి ఆత్మనోఽన్యత్తృణంనహి ।
ఆత్మనోఽన్యత్తుషనాస్తి సర్వంఆత్మమయం జగత్ ॥

ஆத்மாவுக்கன்னியமாய் ஜகத்தில்லை ; ஆத்மாவுக்கன்னியமாய் சுகமுமில்லை ; ஆத்மாவுக்கன்னியமாய்ப் புகலிடமில்லை; ஜகத்தெல்லாம் ஆத்மமயமாகவே யிருக்கிறது ; எவ்விடத்திலும் ஆத்மாவுக்கன்னியமாய் ஒன்றுமில்லை ; ஆத்மாவுக்கன்னியமாய்த் துரும்புகூடவில்லை; ஆத்மாவுக்கன்னியமாய் ஒரு உமியளவு மில்லை ; ஜகத்தெல்லாம் ஆத்மசுவரூபமாகவே யிருக்கிறது.

నిత్యానందమయంబ్రహ్మ కేవలంసర్వదాస్వయం ।
అనంతమవ్యయంశాంతమేకరూపమనామయం ।
మత్తోఽన్యదస్తి చేన్మిథ్యా యథామరుమరీచికా ।
వంధ్యాకుమారవచనే భీతిశ్చేదస్తికించన ।
శశశృంగేణనాగేంద్రో మృతశ్చేజ్జగదస్తికం ।
మృగతృష్ణాజలంపీత్వాతృప్తశ్చేదస్త్విదంజగత్ ।

நித்தியானந்தமாயும், எப்போதும் கேவலமாயும், முடிவற்றதாயும், நாசமற்றதாயும், சாந்தமாயும், ஒரேரூபமாயும், துன்பமற்றதாயுமிருக்கிற பிரமம்நானே ; என்னைக்காட்டிலும் வேறேயிருந்தால், கானல் ஜலம்போல் அது பொய்யேயாம் ; மலடிமகன் சொல்லுகிறவார்த்தையினால் பயமடைந்தேனென்றால், ஜகத்திருக்கிறதாகச் சொல்லலாம்; முயற்கொம்பினால் ஆனை கொல்லப்பட்டதானால், ஜகத்திருக்கிறதாகச் சொல்லலாம் ; கானற்ஜலம் குடித்து தாகமடங்கித்தென்றால், ஜெகத்திருக்கிறதாகச்சொல்லலாம் ; (இவைகளெப்படிப்பொய்யோ அப்படி ஜகத்தும்பொய்யென்பதுதாத்பரியம்)

అహం బ్రహ్మేతినిశ్చిత్య అహంభావంపరిత్యజ ।
సర్వమేవలయంయాతి సుప్తహస్తస్థపుష్పవత్ ।
నదేహోనచకర్మాణిసర్వంబ్రహ్మైవకేవలం ।

நானே பிரமமென்று நிச்சயம்கொண்டு அகப்பாவத்தைவிட்டுவிடு, அப்போது தூங்குகிறவன் கையிலிருக்கிற புஷ்பம்போல எல்லாம் லயத்தையடைகிறது (பிறகு) தேகமுமில்லை. கருமமுமில்லை, சகலமும் பிரமமாத்திரமே.

இதுகாறும் கூறிப்போந்தப் பிரமாணங்களினால் ஜெகத்தனித்திய மென்பதும், பிரமம் நித்தியமென்பதும், பிரமம் இரண்டற்றதென்பதும், பசுமரத்தாணிபோல் நாட்டப்பட்டவைகாண்க. இதற்கிணங்கியே சர்வமும் பிரமமயமாய்க்காணும் மெய்யுணர் வெய்தும்படிக்கான அதிதீவிரபக்குவம் எம்மனோர்க்கின்மையால், தேகமே நானென வபிமானித்துக் கொண்டு நானெனுமகங்காரமும், எனதெனு மமகாரமுங்கெடாமல், தாலமிசை யென்பத்து நான்கு நூறாயிரந் தொகையறு மியோனிகடோறுஞ் சகடமோடு காற்றாடியூசலும்போல பிறந்திறந்த ழல்கின்றோம் ; அதனாலேயே "உறங்குவதுபோலுஞ் சாக்காடுறங்கி விழிப்பதும் போலும் பிறப்" பென்றார்நாயனார். இங்ஙனம் அனந்தஜென்மங்களிற்செய்த கிஞ்சித்புண்ணியவசத்தால், மானுஷ்யஜென்மங் கிடைக்கப்பெற்றனம். இம்மானிடஜென்மத்தி னருமையை விசாரிக்கப்புகின்—

### அவிவானந்தசித்தியார்.

தேரிற்சதுர்யுக மிரண்டாயிரநாட்
டிங்களான்
டோரிலைந்நூற்றி லயன்மாண்டுகோந்தமு
முற்றுதென்பாற்
சேருறுகத்துளையில் வடபாற்கழி
செல்லெளிது
சாரும்பிறப்பொழித் திம்மானிடத்திற்
சனிக்கரிதே.

அரியதிம்மானிட மாகியருஞ்சுனை
நீரருந்தி
திரியுமன்னுட்டிடை தப்பிநன்னுட்டிடை
சேர்வரிதிங்
குரியபிரபஞ்ச நூலினைப்பொய்யென்றிங்
குண்மைநன்னூல்
தெரிதலரிது பயன்கேட்டதனிலை
சேர்வரிதே.

### ஔவையார்.

அரிதரிது மானிட ராகுத லரிது
மானிடராயினுங் கூன்குருடு செவிடு
பேடுநீக்கிப் பிறத்த லரிது
பேடுநீக்கிப் பிறந்தகாலையும்
ஞானமுங் கல்வியு நயத்தலரிது
ஞானமுங் கல்வியு நயந்தகாலையும்
தானமுந்தவமுந் தான்செய்த லரிது
தானமுந்தவமுந் தான்செய்வ ராயின்
வானவர்நாடு வழிதிறந் திடுமே.

இத்தகைய மானிடஜென்மத்திற்றானே கருமம், உபாசனை, பக்திகளினால் கிரமமாகச் சித்

த சுத்தியும், சித்த ஏகாக்கிரமுமாகிய மேலான பக்குவம் சித்தித்தற் பாலதாத லானும் "இப்பிறவிதப்பினு லெப்பிறவிவாய்க்குமோ" வென்னும் ஆப்தவாக்கியங்களாலும் "ஒன்றே செய்யவும் வேண்டுமொன்றும் நன்றே செய்யவும் வேண்டும், நாளைநாளையென்பீராயின் நம்முடை முறை நாளாவது மறியீர் நமனுடை முறைநாளாவதுமறியீர்" என ஈச்சுவர பக்திபாச வைராக்கியம், ஜீவகாருண்ணியம், பிர்மஞானம் இந்நான்கினையும் லக்ஷணமா யுடைத்தாகிய மஹான்கள் திருவாய்மலர்ந்தருளினது மாத்திரமோ, அன்னோர்களே ஜீவர்களுய்யுமாறு சரிதை, கிரியை, யோக, ஞானமென்னும் நான்குமார்க்கங்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்; அவைகளை யவாளவாளின் பக்குவங்களுக்கேற்ப கிரமங் கிரமமா யநுஷ்டித்து நிரதிசயானந்தத்தைத் துய்த்தலே யெமது நீங்கலாக்கடமையாம்; இதனை யநுசரித்தே கீழ்வருஞ் செய்யுட்க ளுணர்த்துதல் காண்க.

தாயுமான ஸ்வாமிகள்.

"விரும்புஞ்சரிதைமுதல் மெய்ஞ்ஞானநான்கு
மரும்புமலர்காய்கனிபோ லன்றோபராபரமே"

என்றும்,

"மூர்த்திதலந்தீர்த்த முறையாய்த்தொடங்கினர்க்கோர், வார்த்தைசொலச்சற்குருவும் வாய்க்கும்பராபரமே"

என்றுமே பின்னும் "பலஸ்யகாரணம் புஷ்பம்பலம் புஷ்பவினாசனம், ஞானஸ்யகாரணம் கர்மம் ஞானம் கர்மவினாசனம்" என்னும் வாக்கியாநுசாரேண பிரமவரன், பிரமவரியான், பிர்மவரிஷ்டன் இவர் மூவரிடத்தும் வருணாசிரமதர்மங்கள் சித்திரைசெய்வோன் கைபொருட் போன்று நழுவப்படினும் ஜீவன் முக்தியைப்பிராபித்தபிரமவித்துக்கள் சற்றெனினும்பிறழ்வுறா தநுஷ்டிப்பர்கள் என்பதற்குப்பிரமாணம் வருமாறு.

கைவல்லியம்.

திரராய்ப் பிரமவித்தாய்த்
　தெளிந்தவர் தெளியுமுன்னம்
வாரமாயிருந்த தங்கள்
　வருணமாச்சிரமஞ் சொன்ன
பூாரகாரிய மானாலும்
　பலர்க்குப காரமாக
நேராகச் செய்வார்தீர்ந்த
　நிலைவிடாச் சீவன்முக்தர்.

இங்ஙனம் கமலபூத்திரோதகத்திற் கொப்பன உலகத்தினைப் பற்றியும் பற்றுமலு மிரான்ற, ஜீவன் முக்தர்களே சத்கர்மதாரிகளாய் விளங்குவரேல், எம்போலிகள் வேதாந்தசாஸ்திரங்களிற் சிறிது பாகத்தினை மேலெழுந்தவாரியாய்ப் பார்த்துவிட்டு வர்ணாசிரம தர்மங்களைத் தியஜித்தலும், பிரம விஷ்ணு ருத்திராதிகள் நஸ்வரந்தானே அவாளை யேன் வணங்கல் வேண்டுமெனப் பிரஸ்தாபித்தலும், ஏழாம்பூமியி லிருப்போரைப்போல நடித்து "சாஸ்திரக்குப்பையைத் தள்ளுங்கடி யுங்கள் தத்துவப்பொத்தலை மூடுங்கடி" யென்னும் வாக்கியங்களை யெடுத் துதகரித்தலும் அதப்பதனத்திற்கு ஆளாக்குமென்பதும் சத்தியம் சத்தியமேயாம். அவ்விதச்சேஷ்டைகள் எம்மைப் பாதிக்காமலிருக்கும்பொருட்டு எனதுபாசனாமூர்த்தமாகிய சுப்பிரமண்யத்தைப் பஜிப்பேனாக.

விருத்தம்.

விஞ்சையின்றுறாத விவற்றின்மிக்கன்றோ
　வீண்டம்பமாக வேதாந்தம்
அஞ்சுகம்போலு மழகெழப்பிற்ற
　லரகரா மனக்குறும்பகற்கு
வஞ்சகச்செயலா லென்பயனுளது
　மலத்தையுள்வைத்து மீற்றுடைக்கும்
பஞ்சையென்றென்னைப் பலரிகழாமற்
　பாவிப்பா யுதையனுபுரனே.

கீர்த்தநம்.

இராகம்-பரசு-ஏகதாளம்.

பல்லவி.

பிர்மாநுபவ சுகமேசுகம் – பிறிதனைத்தும்
விர்தாவாகுமே ஜெகம்

அநுபல்லவி.

கர்மாநுஷ்டானமதான மெய்ப் பக்தி
கசியக்கசியக்கை கூடிடுமே முக்தி (பிர்மா)

சரணங்கள்.

ஓதுஞ்சரிதை யாதிக டழுவியே
உற்றஞானத்திவை போகமே நழுவியே
ஈதுகனவின் பொருளாய்க் கருதியே
எந்நாளுமாத்ம விசாரம் புரிதியே
பிர்மா.

அநித்யமானஜட மாயை சம்பந்தம்
அநாதிமயக்கத் திடையெழு தொந்தம்
வனத்திற்சென்றாலு மாறாது தர்க்கந்தம்
வஸ்துநிக்ஷயஞ்செய் தோர்க்கேது பந்தம்
பிர்மா.

சாஸ்திரவாசம் பரோக்ஷத்தினைக் கூட்டும்
சற்குருபாதமே தன்மயமாய்க் காட்டும்
நேத்திரதாய்ப்பத்ம நாடகவி யூட்டும்
நிஷ்டாநுபூதியே நீள்வினையையோட்டும்
பிர்மா.

ஓம் தத்ஸத்.

## அத்துவைத மத விரோத விளக்கம்.—(தொடர்.)

### ஆ ரு ம் ப த் து.

பெருமையுஞ்சிறுமை குணமவகுணத்தாற் பெயர்களுமியற்கை சேர்க்கைகளால்
வருமவைமேன்மை தாழ்மையும்வேறும் வறுமையுமுடைமையு மொன்றே
கருமையும்வெண்மை செம்மையும்பசுமை கனமுறுதங்கமு மிரும்பும்
ஒருமையும்பன்மை யுவர்கசப்பினிப்பு மொன்றெனச்சொல்லுவ துறுமோ. (க)

சொத்துகளில்லாச் சுவாமியுமில்லை சுதனிலாத் தகப்பனுமில்லை
வித்திலாச்செடியும் செடியிலாவித்தும் வெறுமையி லுளபொருளேது
வத்துவாகாதகிர்க் குணத்தினிற்சகுணம் வந்துதோன்றுவதெனப் பொருந்தா
முத்தியும்பந்த முற்றவர்க்காகும் மூடனல்விவேகியின் சிறப்பே. (உ)

படியினிற்குளவி வேறுகீடத்தைப் பரித்துத்தன் கூட்டினிற்பதித்து
வடிவந்தன்போல மாற்றுவதாக வழங்குமவ்வாய்மை யாராய்ந்தே
முடிவதையறிய முயன்றவர்தமக்கு மூட்டையிற்றோன்றுங் குஞ்சிற்கு
இடமிலையாக வெளிதினிற்காணு மெட்டியுங் கன்னலாய்விடுமோ. (ங)

சிட்டியுந்திதியும் லயமெனுமூன்றும் ஜெகத்தினிற் சிறந்தகாரியங்கள்
மட்டிலாஞான சக்தியாதிகுணங்கள் மருவியபகவனு னிகழும்
சிட்டர்களியற்றுந் துதிவழிபடுமத் தெய்வஆராதனை தியானங்
கட்டியபவத்தின் றளையவிழ்த்தற்குக் காட்டியநூல்கள் கற்பனையோ. (ச)

அகிலகாரணனு யிரக்ஷகனுகி யடியவர்க்கமுதவா ரிதியாய்
நிகிலமாமகண்ட வெளிப்பிரமாண்டங்கள் நிரைநிரையாய் நிலைநிறுத்திச்
சகலமாகியவச் சராசரமெவையுந் தாங்குமப்பரம்பொரு ளாகும்
நிகரிலாச்சர்வ ஸக்திபாமதனை நிர்விசேடசின்மாத்திர மெனவோ. (ரு)

காந்தத்தினருகி லயத்திற்குச்சலனங் காணுவதின்வகை போலச்
சாந்தமாம்பிரம சன்னிதியதனில் சகலமாமுலகத்தைப் பகுதி
ஈந்ததாய்ச்சொலினுங் காரணமீசன் காரியம்பகுதிதானுகும்
போந்தவச்சலனங் காந்தத்தினிடமாய்ப் பொருந்துமா கர்ஷணத்தாலாம். (சு)

உலகினிற்சிருட்டி பலவகையாக ஒன்றினிலனேகமா யதுவும்
நிலைபொருமவற்றில் தனித்தனிவேறாய் நிறங்குணஞ்சாயலும் பொருந்தி
பலபலவிதமாய்ப் பரந்துதானுளதால் பராபரன்மகிமையீ தெனவே
கலைபகருண்மை காக்ஷியுந்துறந்து சண்டதெல்லாங் கனவென்றே. (எ)

நினைவதேநீண்ட கனவெனுமவர்க்கு நிலையுறுமுலகமுங் கனவே
புனையவர்மதமுங் கனவதாய்முடியும் பொய்யினில் மெய்யதாமேது
வினையெனும்நன்மை தீமையுமில்லை வேதமேன்வாக்கிய மெதுக்குச்
சனனமுமரண மேதுதானில்லை சற்குருபோதமே வீணும். (அ)

வாக்கியமாகுமத் தத்துவமசிக்கு வத்துவாம் பிரமநீயாக
நீக்குமச்சொல்லில் நீயதுவெனவே நிகழ்நபொருட்களைக் குறித்து
நோக்குமச்சுருதி நுண்பொருள்கினக்கு நுவலுமானந்த சாமியமே
யாக்குமப்பரம னெனும்வெகுசுருதி யனேகப்பிரமாண சித்தமதே. (கூ)

கடவுளுந்தன்மை யிலாதவனுகிக் காணுமிவ்வுலகமும் பொய்யாய்
கடவுமிச்சிருட்டி திதிலயமூன்றும் நாடிடும்தோற்றமாத் திரமாய்த்
தடையெனுமவித்தை ஜீவனும்பிரமைத் தானதைநீக்கிப் பிரம்மமாய்ச்
கடைசினில்முத்திச் சுகாசுகமற்றுக் காண்பதே கைவல்யமென்றே. (க0)

இவ்வகையுலாக்கு மவைதிகப்பொருளை யெடுத்துநற்பிரமாண யுத்திகளான்
செவ்வையாய்த்திருத்திச் சித்துமசித்து மீசனுந்திரமென்றே நிறுத்தும்
திவ்வியஞான தேசிகராமா நுஜனிணைத் திருவடிமலர்கள்
நவ்வெனப்பற்றுஞ் சக்கரபாணி நவிலுமிப்பதிகங்க ளாறே. (கக)

ஸ்ரீமதச்சுதசடகோப எதிராஜ வரவரமுனி நிஜகுருப்யோநமஃ.

அப்பாற்பட்டவனும் இரண்டற்றவனும், நிர்க்குணனும் எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியும், தமோதீதமாயுள்ளவனும் ஞானஸ்வரூபியுமான ஸர்வோத்தமன் சிவனே என்பது வேதஸம்மதமாயிற்று''] என்று, வேதாந்தசாகரத்தில் முழுகிப்போனார். என்னபயன்! முழுகினால் ஆநர்த்தமுண்டாமா? ஆகாதாகையால் அவரைக்கரையேற்றி மூர்ச்சைதெளியச்செய்து, அதில் விளையாடி, பரமாநந்தத்தை யடையும்பொருட்டு நாம் அவ்வேதாந்தசாகரத்துறையில் இறங்குவோமாக.

சுபாலோபநிஷத்து.

యఃపృథివీ మంతరే సంచరన్ యస్య పృథివీ శరీరం
యంపృథివీ నవేద।
ఏష సర్వ భూతాంతరాత్మా అపహతపాప్మా
దివ్యోదేవ ఏకోనారాయణః।

என்று, 'பிருதிவியினுள்ளே சஞ்சரித்தவனாய், பிருதிவியை சரீரமாகவுடையவனாய், பிருதிவியினால் அறியாதவனாய் சர்வபூதங்களிலும் அந்தராத்மாவா யிருக்கின்ற நாராயணன் ஒருவனே யிருக்கின்றான் இரண்டாவதில்லை என்று கண்டிதமாய்க் கூறியிருக்கிறபடியால், "வாசுதேவ: பர:ப்ரகிருதி:" என்றதற்கு விஷ்ணுவை "பிரகிருதிரூபி அதாவது மாயையே உருவாகச்சொல்லி" ற்று என்ற சர்மா கூற்று அவலமாயிற்றென்க. ஆயின், அச்சுருதிற்கு அர்த்த மென்னை யெனின், பிரகிருதிக்கு மேலானவன் வாசுதேவன் என்றே பொருந்துமென்க. ஆகையால், இவர் காட்டிய பிரமாணங்களெல்லாம் ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியையே யடைந்து மகிமையுற்றதென்க.

இவ்வண்ணம் சுருதியின் கருத்தையே ஸ்மிருதிகள் சித்தாந்தப்படுத்துகின்றன.

ஆரிதஸ்மிருதி.

సహస్రమూర్ధా విశ్వాత్మా సహస్రకరపాదవాన్
యద్గత్వానినివర్తంతే తద్ధామపరమంహరేః।

ஆயிரந்திருமுடிகளையும், திருக்கைகளையும், திருவடிகளையும் எங்கும் பரப்பி நிறைந்துள்ள பரியாத்மாவான ஹரியே எல்லார்க்குங் கதியானவன், மேலான இடத்திற் பிரகாசிக்கிறவன்.

போதாயனஸ்மிருதி.

నారాయణసమోనాన్య స్సర్వలోకేషువిద్యతే।
తస్మాదభ్యధికఃకశ్చిల్లోకేనాస్తిహికేశవాత్।

நாராயணனுக்குச் சமானம் சர்வலோகங்களிலும் அறியப்படுகிறவர்கள் ஒருவருமில்லை. அக்கேசவனைக்காட்டிலும் அதிகமானவன் உலகத்திலில்லை.

మనుష్యాణాంపరో విప్రః విప్రాణాంపరమో యతిః।
బ్రహ్మేశేంద్రాదిదేవానాం దేవోనారాయణఃపరః।

மனுஷ்யர்களுக்குள்ளே விப்பிரன் மேலானவன். விப்பிரர்களுக்குள்ளே யதிமேலானவன். அப்படியே பிரமன் சிவன் இந்திராதிதேவர்களுக்கு மேலான தேவன் நாராயணன்.

ప్రకృతేఃపరమోవిష్ణు రండఃప్రకృతికారణః।
అండజానిభూతాని స్థావరాణిచరాణిచ।

பிரகிருதிக்குமேலானவன் விஷ்ணு. அவனே அண்டத்திற்கும் பிரகிருதிக்குங் காரணன். அண்டங்களும், பூதங்களும், தாவரங்களும் சராசரங்களும் அவனிடத்திலேயேபிறக்கின்றன.

విబుధేభ్యఃపరశ్శక్రః శక్రాత్పరతరశ్శివః।
శివాత్పరతరోబ్రహ్మా బ్రహ్మణఃపరమోహరిః॥

உலகத்தாருக்கு மேலானவன் இந்திரன், இந்திரனுக்கு மேலானவன், சிவன், சிவனுக்குமேலானவன் பிரம்மா, பிரமனுக்குமேலானவன் ஸ்ரீஹரி.

మాధవఃపరమోవ్యక్తః పరేశంపరమోవ్యయః।
నాస్తితస్మాత్పరోదేవః సర్వదేవేషునిశ్చయః।

அவ்வியத்தனும் அவ்வியயனுமான மாதவனைக்காட்டினும் மேலான தேவனில்லையென்று சர்வதேவர்களினின்றும் நிச்சயிக்கப்பட்டது.

విష్ణుఃపరమఇత్యాద్యా బహ్వృచశ్చబహుధాజగుః
నారాయణఃపరఇతి యజుర్వేదేచపఠ్యతే।

விஷ்ணுவே பரமன் என்று வெகுப் பிரமாணங்கள் விளங்குகின்றன. நாராயணனே பரனென்று யஜுர்வேதம் படிக்கிறது.

నారాయణంపరఇతి సామవేదేచగీయతే।
నారాయణఃపరఃపశ్చాన్మహోపనిషది స్మృతః।

நாராயணன் பரன் என்று சாமவேதம் கூறுகின்றது. நாராயணன் பரன் என்று மகா உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன.

இவ்வண்ணம் ஸ்ரீவிஷ்ணுவின் சர்வோத்தமத்தை சாஸ்திரங்களெல்லாம் முறையிடுகின்றபடியால் "சிவனே சர்வோத்தமன்" என்னும் சர்மாவின் குக்குடக் கூச்சல் கூண்டோடொழிந்ததென்க.

(இன்னும் வரும்)

தி. ப. சேஷாத்திரி அய்யங்கார்
பல்லாரி.

# பொதுப்பிரகாணம்.

## ஔவையார் நீதிவாக்கியம்.

(௧௨௧-ம் பக்கத்தொடர்.)

### தானமது விரும்பு.

பொருள்.

தானமது=தருமஞ்செய்வதற்கு
விரும்பு=ஆசைகொள்ளு.

கருத்து.—நீ கிரகாசிரமத்திலிருந்து வாழ விருப்பமுண்டாயின், தரித்திரருக்கு வேண்டிய தருமத்தைச்செய்ய விரும்பு.

குறளுதாரணம்

சாதலினின்னாத தில்லையினிததூஉ
மீதலி யையாக்கடை.

பொருள்.

சாதலின்=இறத்தல்போல்
இன்னாதது=துன்பஞ்செய்வதொன்று
இல்லை=இல்லை.
அதூஉம்=அப்படிப்பட்ட இறத்தலும்
ஈதல்=தரித்திரருக்குக்கொடுத்தல்
இயையாக்கடை=முடியாதவிடத்து
இனிது=இன்பஞ்செய்வதாகும்.

கருத்து.

ஈய்ந்து வாழ்தலாகிய இல்லறத்தினின்றும், ஈயாது வாழ்தலினுஞ்சாதல்நன்று. பிறருக்குப் பயன்படாதவுடற்சுமைநீங்குதல் நன்மையாம்

---

### திருமாலுக் கடிமைசெய்.

பொருள்.

திருமாலுக்கு=மாயோனுக்கு
அடிமைசெய்=நீயடிமைத்தொழிலைச்செய்.

கருத்து.

உலகமாயையுன்னை வருத்தாமலிருக்கவேண்டுமாயின் ஸ்ரீமகாவிஷ்ணுவை ஆண்டானாகவும், நீ அடிமையாகவு மிருப்பாயாக.

குறளுதாரணம்.

இருள்சேரிருவினையுஞ் சேராவிறைவன்
பொருள்சேர்புகழ்புரிந்தார் மாட்டு.

[௪௭ம் பக்கத்தில் இதன்பொருளைக் காண்க.]

கருத்து.

இருவினைகளும் அஞ்ஞானமாகிய மாயையால் வருவனவாதலின், அம்மாயையைக்கடந்துநிற்க ஒருவராலுங் கூடாதாதலாலும், அம் மாயைதானும மாயோனாணையைக் கடந்துநிற்க மாட்டாதாதலாலும் அக்கடவுட்குத் தொண்டு புரிவாயாயின் அது வருத்தாதென்பதாம்.

# கட்டுக்கதைகள்.

## கப்பல்யாத்திரை பண்ணாதவன்.

இதற்குமுன் எப்போதுங் கப்பல்யாத்திரைசெய்யாத ஓர் மனிதன் கப்பலேறிப்போகும்போது, வலுத்த ஒரு பிசலடிக்க, கொஞ்சநாழிகைக்குள் அக்கப்பல் மணற்கரை தட்டும்படியாய் நேரிட்டது. அப்போது அவன் தவிர எல்லோருக்குந் தங்கள் தங்கள் அபாயம் நன்றாய்த்தெரிந்திருக்க, இவன்மாத்திரம் பூமியைக்காணும்படியான ஆழமில்லாநீரில் மற்றொருதரந் தன்னைக் கொண்டு வந்ததிற்காகத் தன் மட்டுங் கடவுளைப் பிரார்த்தனைசெய்தான்.

நீதி.

அந்தத்தில் நமக்கு மிகவுங் கெடுதியாய் முடிகிறதை நமக்குநன்மையென்று நாம் சிலவேளை பிசகாய் நினைக்கிறோம்.

---

## குதிரையும், கழுதையும்.

ஜம்பமான ஆபரணங்களையலங்கரித்துக்கொண்ட ஒரு அகங்காரமுள்ள கொழுத்தகுதிரை, பளுவான சுமையையெடுத்துக் கொண்டுபோகும் ஓரெளியகழுதையை மார்க்கத்திற் கண்டு, என்னடா, இப்போ எப்படியிருக்கிறது, இந்த ஆயுத ஆபரணங்களினால் இன்ன எஜமானுடைய குதிரையென்று நீயறியவில்லையா? என்முதுகின்பேரில் என்னெஜமான் உட்காரும்போது, இராஜாங்கத்தின் பொறுப்பெல்லாம் என்தோளின்பேரிலிருக்கிறதென் றுனக்குத் தெரியாதா? மிக ஈனமாகிய கர்வமுள்ள ஜந்துவே! நீவழியைவிட்டிரு, இல்லாவிடில் நானுன்னை தும்சப்படுத்திவிடுவேனென்றுசொல்ல, உடனே அந்தஅபாக்கியமுள்ள கழுதையானது, இந்த பாக்கியமுள்ள ஜந்துவைப்போலாகிறதற்குத் தான் என்னசெய்கிறதென்கிற பொறுமையான எண்ணத்தோடு ஓர் பக்கமாய் ஒதுங்கிப்போய்விட்டது. கழுதை யிவ் வெண்ணங்கொண்டிருக்கையில், கொஞ்சநாள் பொறுத்து, அக்குதிரை, ஒருசாதாரணமானகுப்பைவண்டியை யிழுத்துக் கொண்டு போவதைப் பார்த்து, சிநேகிதா! இப்போதேனிப்படி நேரிட்டதென்றுகேட்க அதற்கு குதிரையானது, இது சண்டையிலுண்டான தற்செயல்தான், முன்னே என்னை நீபார்த்தபோது நானொருசேனாதிபதியின் குதிரையாயிருந்து, சண்டைக்குப் போனவிடத்தில்வெட்டுண்டு மொண்டியாக்கப்பட்டபடியால், இப்போது உன்முன் நான் அடைந்திருக்குந் துரதிஷ்டத்தைப் பாரென்றது.

நீதி.

சீக்கிரத்தில் அழிந்துபோகத்தக்கவைகளில் ஆனந்தங்கொள்ளுதல் கர்வத்தையுடைய அவிவேகிகளின் தன்மையாயிருக்கின்றது. மனிதர்கள் மூடத்தனத்தினாலும், வறுமையினாலும், தாழ்ந்த ஸ்திதியினுடைய சுயஇச்சையையும் பிரயோஜனத்தையும் இகழ்கின்றார்கள்.

# ஆரியமத தூஷணபரிகாரப் பிரகரணம்.

## ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தம தர்மமும்,

(ஓர் பிரசங்கபங்கமும்.)

(கூ0-ம் பக்கத் தொடர்.)

IV.—குணம்.

ஆரியர்களே! சர்மாவானவர் திரிமூர்த்திகளின் குணவிசேஷங்களை யெடுத்துக்காட்டப் புகுந்து, விஷ்ணு ["உள்ளே தமசும், வெளியே சத்வகுண முள்ளவர்"] என்றும், ["உருத்திரர் வெளியே தமசும், உள்ளே சத்துவகுண முடையவர்"] என்றும், "கோடரிக்காம்பு குலத்தைக் கெடுத்தது" போல், ["பிரம விண்டு ருத்திரர்கள் பசுக்கள்"] என்றும் முடித்துப்போட்டார். இவற்றால், விஷ்ணுவுக்கு அவரிஷ்டப்படி உள்ளே தமசிருந்து, வெளியே சத்துவகுண முண்டாயிருந்தால், வெளியேயிருக்கும் சத்துவம், உள்ளே அழுந்தி நாசமான தமசை வெளியாக்காது நன்மையைக்கொடுக்கும். வெளியேயிருக்கிற தமசானது உள்ளேயிருக்கும் சத்துவத்தை அழுத்தித் தீமையைக் கொடுக்கும் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்ற தல்லவா? "அகத்தினழகு முகத்திற் றெரியும்" என்பது பிரசித்தமாகையால், உருத்திரர்க்கு வெளியேயிருக்கும் குணமே உள்ளே விளங்கும் என்பது சித்தாந்த மாயிற்றென்க.

யஜுர்வேதம்.

యోసావజితో విష్ణు స్సత్వగుణ ప్రణేతా ।
అథ తస్య నాభే రజోత్మా స్వయంభూః ।
అథ తస్య భ్రువోరంతరాత్ తమాత్మా రుద్రః
ప్రాదుర్భవత్ ।

என்றபடி, சதா சத்துவகுணமுடைய விஷ்ணுவின் நாபியினிடத்தில் ரஜோகுணனை பிரம்மாவும், பிரமனுடைய புருவத்தின் மத்தியில் தமோகுணனை உருத்திரனும் உண்டானார்கள் என்பதை, சர்மா மறைக்கும்பொருட்டு இறங்காத் துறையி லிறங்கி இடறலானார். விஷ்ணுவுக்கும், உருத்திரருக்கும், இரண்டு குணங்களைக் காட்டினவர் ["பிரமன் ரஜோகுணம்மேலிட்டவன்"] என்று, பிரமனுக்கு ஒரேகுணத்தைக் காட்டினதென்னே? உருத்திரர் பசுவாயின், அவர் உள்ளேதமசு, வெளியே சத்துவகுணமுடையவரென்று மகிமைப்படுத்துவானேன்? "மாயாசம்பந்த" முடையவரென்றால், மாயாசம்பந்தமுள்ள எல்லார்க்கும்ஒவ்வொருகாலத்தில் முக்குணங்களி லொன்றென்றும் பிரகாசிப்பது சகஜமல்லவோ? இப்படியிருக்க, உருத்திரருக்கு உள்ளும் வெளியுமாக இரண்டுகுணங்கள் காட்டுவானேன்? இச்சர்மாவின் கூற்றால் மூவரும் குணவசப்பட்டவர்களென்று முடிவாயதன்றோ?

இதுநிற்க, ["விஷ்ணுமூர்த்தி ஸாக்ஷாத் ஸத்வகுண பிரதானர் என்றாலும், குணமூர்த்தியே யொழிய குணாதீதரன்"] றென்று கூறினர்.

குணாதீதர் என்றால் யாதொரு குணமுமில்லாதவர் என்று சர்மா கூற்று. எக்குணமுமில்லாமலிருந்தால் பிரபஞ்ச சிருஷ்டியாதிகள் எப்படி நடக்கும். நடவாதாகையால் குணாதீதரென்றால் ஏயகுணமில்லாத கலியாண குணங்களென்னும் சுத்த சத்துவகுண முடையவர் என்று பொருள்கொள்ளவேண்டும்.

இப்படிக்கொண்டாலொழிய பரமாத்துமா சொரூபம் நிலையாது. பரமாத்துமா, சொரூப குண சேஷ்டிதங்களற்றிருக்காது. அவைகளோடுகூடி அந்தரியாமியாகப் பரிபூர்ணமாயிருக்கும். ஆதலால்,

తత్ర ముఖ్య ప్రవృత్తోయం గుణ యోగస్సు పుష్కలః ।

என்கிறபடி பூர்ணமான குணங்களிருக்கிற விடத்தே பிரவிர்த்தித்துக் கொண்டிருக்குமென்று சொல்லிற்று. மற்றவைகளெல்லாம் உபசாரத்தால் சொல்லப்படும்.

ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில்,

జ్ఞాన శక్తి బలైశ్వర్య వీర్య తేజాంస్య శేషతః ।
భగవచ్ఛబ్ద వాచ్యాని వినా హేయై ర్గుణాదిభిః ।

என்கிறதில், ஏயகுணங்களில்லாமல் ஞானம், சக்தி, பலம், ஐஸ்வரியம், வீரியம், தேஜஸுக்கள் பரிபூரணமாயிருக்கின்றவன் பகவான் என்று விளக்கியிருக்கின்றமையால் அக்குணங்கள் இருக்கின்றவராகிய ஸ்ரீவிஷ்ணுவே குணாதீதரென்பதமையும்.

அன்றியும், இச்சர்மா ["தூக்கம், கருநிறம், நீர்வாழ், பெருந்தீனி, பெயர் காமம் என்பவற்றால் நிலைறந்த விஷ்ணுமூர்த்தியைவிட இன்ன அவலக்ஷணங்க ளில்லாத ருத்திர மூர்த்தியே வேதத்தில் நிர்க்குணப்பொருளாகிய நான்காம் மூர்த்தியைப் பிரஸ்தாபித்து,

శివమద్వైతం శాంతం చతుర్థం ।

என்று, கூறியிருப்பதால் "சிவபெருமான், நிக

ரற்றவரும், சாந்தரும் நான்காம் பொருளான குணாதீதரும் என்பதில் ஐயமேயில்லை"]யென்றனர்.

'தூக்கம்' முதலிய தூஷணைப்பதங்களுக்கு நாமும், முறையே சிவபிரானை வினைச்சொல்ல அநேகமிருந்தாலும், அவை பண்டிதாஞ்சிதமாகாதாகையால், மற்ற விஷயங்களை நாடுவோமாக.

இச்சர்மா, "சிவம், அத்வைதம், சாந்தம், சதுர்த்தம்" என்று கடந்தவஸ்துவின் லக்ஷணங்களைக்காட்டி, அவை குணருத்திரனையடையுமென்று, வேதார்த்தத்தைக் கரைகண்டவர்போல் வெளிவந்தார். ஆவா! என்ன ஆச்சரியம்! இல்லை இல்லை, குணாதீதருத்திரருக்குப் பிரமாணமாகக் கொண்டாரெனின், அப்படிக் கொள்ளுவது விஷ்ணுவுக்குப் பொருந்துமேயன்றி, உருத்திரனுக்குப் பொருந்தாது. எங்ஙனமெனின், "சிவமத்வைதம் சாந்தம் சதுர்த்தம்" என்ற வேதமே,—

தைத்திரியோபநிஷத்து.

సహస్రశీర్షం దేవం విశ్వాక్షం విశ్వశంభువం।
విశ్వన్నారాయణం దేవ మక్షరం పరమం ప్రభుం।
విశ్వతః పరమం నిత్యం విశ్వం నారాయణం హరిం।
పతిం విశ్వస్యాత్మేశ్వరం శాశ్వతం శివ మచ్యుతం॥

இத்தொடர்பிகு சுருதிவாக்கியங்களில் தேவன், சம்பு, நாராயணன், அழிவில்லாதவன், நித்தியன், ஹரி, ஈசுவரன், சிவன், அச்சுதன் முதலிய நாமங்களால் விஷ்ணுவைப் படிக்கிறபடியால் 'சிவம்' என்று ருத்திரனைக்கூறுவது "வெறுங்கையை முழம்போடுவ" தொக்கும்.

இவர், முன்னர் உருத்திரமூர்த்தியை குணவசியரென்றும், பசுவென்றும் கூறிப் பின்னர் குணாதீதரென்றார். என்ன அழகு? ஆனால், அவருக்குப் பதிருத்திரர் வேறு, பசுருத்திரர் வேறு என்றபிப்பிராயமல்லவா! இருக்கட்டும். பசுருத்திரர் யார்? பதிருத்திரர் யார்? குணவசப்பட்டவர் பசுருத்திரர், குணாதீதர் பதிருத்திரரென்றன்றோ அவர் கொள்கை. அப்போது பசுருத்திரருக்கும், பதிருத்திரருக்கும் சம்பந்தமில்லையல்லவா? இல்லாதபோது, பசுருத்திரனை வழிபடுவானேன். வழிபடவேண்டியதில்லையெனின், அறுபத்து நான்கு திருவிளையாடற்செய்த ருத்திரர் பதியா? பசுவா? அறுபத்துமூன்று நாயன்மாருக்கும் அருள்சுரந்த ருத்திரர் பதியா? பசுவா? அப்படிக் காட்சிகொடுத்த ருத்திரர் பதியாயின் "குணமோ மாயாசம்பந்த" மென்று கூறினதால், அவர் மாயாசம்பந்தமான எக்குணமுமில்லாமல் குணாதீதராகவருவாரா? வருவாரெனின், அவ்வுருத்தோற்றம் மாயசம்பந்தமுடையதா? இல்லையா! ஆமாம்! உருத்தோற்றம் மாயா சம்பந்தமுடையதென்றே சாஸ்திரசம்மதம்; என்றாலும், பதியானவர் அவ்வுருவில் அந்தரியாமியாய் நின்று எவ்வித மாயசம்பந்தமுந் தன்னையடையாமல் அம்மாயையைவென்று ஆட்டியசைக்கவல்ல தேவனாதலால், அத்தேவனைமாயை சம்பந்தமான உருவில் பக்தர்களுக்குத் தோன்றுகிறாரென்பாராயின், அப்படியே மாயை வசப்படாது அம் மாயையைக் கொண்டு பிரபஞ்சத்தை உருவகப்படுத்த சத்துவ ராஜச தாமசமென்கிற மூச்குணங்களுக்கும் அதிதேவதையாக விஷ்ணு, பிரமா, உருத்திரன் என்கிற பெயரை யடைந்து, உலகத்தார் ஞானத்திற்கேற்ப காட்சி தந்தனர் என்று வேதத்தத்துவார்த்தத்தை விளக்கி, இம்மூவருக்கும் அதீதமாய்நின்ற நாராயணனையும் அவரே அம்மூவரிலும் ஒருவராய் நின்ற விஷ்ணுவையும்பரன் என்று என் ஒப்புக்கொள்ளக்கூடாது.

மேலும் சர்மாவானவர் ["శివ ఏక కేవలః என்னும் வேதவாக்ய, அவர்க்கு (சிவனுக்கு) வேறாய் யாவருமில்லை என்பதையும் அறுதியிட்டுள்ளது"] என்றும் விளக்கினர்.

நாராயணோபநிஷத்து.

నిష్కళంకో నిరంజనో నిర్వికల్పో నిరాఖ్యాతశ్శుద్ధో దేవ ఏకో నారాయణః। నద్వితీయోஅస్తి। కశ్చిద్య ఏవం వేద॥

என்ற அவ்வேதமே, நிஷ்களங்கனும், நிரஞ்சனனும், நிர்விகற்பனும், நிராக்கியாதனும், சுத்தனுமான தேவன் நாராயணனொருவனே, அவனுக்கிரண்டாவது ஒன்றுமில்லை என்று அறுதியிட்டுள்ளதால், சிவனையே வேதம் கூறிற்றென்று சர்மா மனப்பால் குடித்தது பிரயோஜனமற்றதென்க.

பின்னுஞ் சர்மா ["விஷ்ணு மூர்த்தியைப் பேசிய வேதமும் వాసుదేవః పరః ప్రకృతిః। என்று, பிரகிருதி ரூபியாக அதாவது மாயையே உருவாகச் சொல்லி, ஸ்ரீசிவபெருமானைப் பற்றிப் பேசும்போது,

తస్య ప్రకృతిలీనస్య యః పరస్స మహేశ్వరః। என்றும்,
సాక్షీ చేతా కేవలో నిర్గుణశ్చ। என்றும்,
తేభ్యో విలక్షణస్సాక్షీ చిన్మాత్రోஅహం సదాశివః। என்றும்,
సమస్తసాక్షిం తమసః పరస్తాత్
என்றுஞ் சொல்லியிருப்பதால் பிரகிருதிக்கு